Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 186 of 2021**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.1**

Defence

Court

| | |
|---|---|
| Name | **தேவகி** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday 9th day of September 2025.**

**எதிரி ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் OT ல் வசிக்கிறேன். ஆஜர் எதிரி எனக்கு மகன். இறந்த பரசுராமன் எனது கணவர். எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் ஒரு மகள். சுமார் 4 வருடங்களுக்கு முன்னர்என் காலில் கட்டி இருந்த காரணத்தினால் நான் என் மகள் புவனேஸ்வரியுடன் கோயம்புத்துரில் இருந்தேன். ஒரு வாரம் கழித்து நான் திரும்ப என் வீட்டிற்கு வந்தேன். கடலூர் Ot ல் நான் என் கணவர் மற்றும் இரண்டு மகன்கள் வசித்து வருகிறோம். அன்று என் வீட்டிற்கு வந்து பார்த்த போது என் கணவருக்கு முன் நெற்றியில் இரத்த காயத்துடன் கூடத்தில் இருந்த பாயில் படுத்து கிடந்தார். அவர் எதுவும் பேசவில்லை. நான் கத்தினேன். நான் மயக்கம் ஆகிவிட்டேன் . பக்கத்தில் இருந்தவர்கள் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். பிறகு நான் மருத்துவமணையில் இருந்து வீட்டிற்கு வந்த போது எனது கணவரை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். காண்பிக்கப்பட்ட புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது அது அதசாஆ 1 ஆகும். புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. யார் கையொப்பம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. எனது மகனுக்கு மனநலம் சரியில்லை. என் கணவரின் இறுதி சடங்கில் அவனும் அழுதான்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**:

என்னுடன் என் கணவரும் கோயம்புத்துருக்கு வந்த இருந்தார் என்றால் சரிதான். நான் வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக என் கணவர் கடலூருக்கு வந்து விட்டார் என்றால் சரிதான். எதிரி சக்திவேலுக்கு அடிக்கடி வயிற்று வலி வரும் என்றால் சரிதான். கடந்த 20.01.2021ம் தேதி என் மகன் எதிரி சக்திவேலுக்கு வயிற்று வலி ஏற்பட்டு மருத்துவமணையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அவரை தீபன்ராஜ் மற்றும் சுபாஷ்

மருத்துவமனைக்கு உடன் அழைத்து சென்றதாகவும் என் கணவர் மட்டும் அவருடன் இரவு தங்கிவட்டதாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மருத்துவமனையில் எனது மகன் எதிரி சக்திவேல் தகராறு செய்து என்னை மருத்துவமனையில் தொடர்பு கொண்டு உடனே வர சொன்னார்கள் என்று சொன்னால் எனக்கு அது தெரியாது. 21.01.2021 அன்று இரவு என் கணவருடன் எனது மகன் எதிரி சக்திவேலும் ஒன்றாத படுத்து இருந்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்க தெரியாது. மறுநாள் 22.01.2021 விடியகாலை 4 மணிக்கு நான் வீட்டிற்கு வந்து பார்த்த போது எங்கள் வீட்டின் கதவி திறந்து இருந்தது என்றால் சரிதான். நான் உள்ளே பார்த்த போது அடிப்பட்டு கிடந்த எனது கணவரின் பக்கத்தில் அவரை தாக்க பயன்படுத்திய மர Stool பக்கத்தில் கிடந்தது என்றால் சரியல்ல. அந்த மர Stool லால் தான் என் கணவரை அடித்து கொலை செய்து இருக்கலாம் என்று நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. தற்போது எனது மகனை காப்பாற்ற வேண்டி எந்த விவரமும் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**:

குறக்குவிசாரணை இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

**நீதிமன்ற கேள்வி**

நான் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடு தொகை ஏதேனும் பெற்றேனா என்றால்?

**பதில்**:

பெறவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court,*

*read over and interpreted to the*

*Witness. Admitted and acknowledged*

*by him/her to be Correct.*

*Tmt.G.Saraswathi*

*I Additional District Judge*

*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 186 of 2021**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.2**
Defence
Court

| | |
|---|---|
| Name | **சுகந்தி** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 9th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday 9th day of September 2025.**

**எதிரி ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் OT ல் வசிக்கிறேன். இறந்த பரசுராமன் எனது கொழுந்தனார். சம்பவ சமயத்தில் நான் திருவண்ணாமலை சென்று இருந்தேன். அப்போது போன் மூலமாக பரசுராமன் இறந்த விவரம் தெரியவந்தது.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**:

இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*

*I Additional District Judge*

*Cuddalore.*